museum of modern
and contemporary art
sri lanka

PRESS RELEASE

2022 டிசம்பர்

**நவீன மற்றும் சமகால கலைக்கான இலங்கை அருங்காட்சியகத்துடன் இணைந்து 'சந்திப்புகள்' கண்காட்சிக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவளிக்கிறது.**

பெப்ரவரி 2022, ஐரோப்பிய ஒன்றியம் (EU) நவீன மற்றும் சமகால கலைக்கான இலங்கை அருங்காட்சியகத்தின் (MMCA இலங்கை) இணைந்து, அதன் இரண்டாம் கண்காட்சியான, பெப்ரவரி 11, 2022ல் திறந்து வைக்கப்பட்ட 'சந்திப்புகள்' கண்காட்சிக்கு ஆதரவளிக்கின்றது.

MMCA இலங்கையின் தலைமை எடுத்தாளுனரான ஷர்மினி பெரெய்ரா, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவை பற்றிக்கூறிய நேரம் கூறியதாவது, "ஐரோப்பிய ஒன்றியம் 'சந்திப்புகள்' கண்காட்சிக்கு ஆதரவளித்ததால், எம்மால் ஆறு மாதங்களுக்கு பொது மக்களுக்கான இலவச நிகழ்ச்சிகளை நடாத்த முடிந்தது. பல நிகழ்ச்சிகள் நாட்டில் பல்வேறு பகுதிகளில் மக்கள் மிகக் கடினமான பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலைக்கு எதிராக நடாத்திய அரங்கலய (போராட்டம்) காலத்தில் வழங்கப்பட்டது." MMCA இலங்கைக்கு நாட்டின் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் பல விருந்தினர்கள் வருகை தந்தனர். விருந்தினர்களின் எண்ணிக்கையை பற்றி பெரெய்ரா கூறிய பொழுது, "புதிர் நாட்கள், கலந்துரையாடல் சார்ந்த நாட்களில் நாம் எதிர்பார்த்ததைவிட அதிகமான விருந்தினர்கள் வருகை தந்திருந்தனர். இதனூடாக எம்மைப் போன்ற அருங்காட்சியங்கள் பொது மக்களுக்கான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ள முடிகின்றது."

Groundfloor, Crescat Boulevard
89 Galle Road
Colombo 03

Registered Address:
117 Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02
Sri Lanka

info@mmca-srilanka.org
www.mmca-srilanka.org

இம் மானியத்தினூடாக, ஐரோப்பிய ஒன்றியம் 1,087 பங்குபெற்றாளர்களை உள்ளடக்கிய 61 இலவச பொது நிகழ்ச்சிகளுக்கு ஆதரவளித்தது. இவற்றுள் 11 பயிற்சிப்பட்டறைகளின் மூலமாக பங்குபெற்றாளர்களுக்கு, கலைப்படைப்புகளினூடாக நேரிடையான ஊடாட்டத்தை ஒழுங்கு செய்ய முடிந்தது. ”இப் பயிற்சிப்பட்டறைகள், கண்காட்சியுடன் தொடர்புபட்ட விடயங்களை மையப்படுத்தி, பங்குபெற்றாளர்களுக்கு முத்திரைகள் மூலமாக வரலாற்றை கற்றல், கதைசொல்லல், தாவரம் வரைதல், பார்ப்பதினூடாக எழுதுதல், தையல் மற்றும் அலங்காரத்தையல், ஒரிகாமி, சூழலுடன் இசைந்து வாழ்தல் என வெவ்வேறு விடயங்களை உள்ளடக்கியது.” என MMCA இலங்கையின் கல்வி மற்றும் பொது நிகழ்ச்சிகளின் துணை எடுத்தாளுனர் பிரமோதா வீரசேகர குறிப்பிடுகிறார். இப் பயிற்சிப்பட்டறைகளில் கல்வியின் முக்கியத்துவத்தை பற்றி வீரசேகர கூறியதாவது, ”பங்குபெற்றாளர்கள் அருங்காட்சியகம் மற்றும் கண்காட்சி சூழலில் இக் கற்றல் அனுபவங்களை பெற்றுக்கொண்டார்கள்.” பயிற்சிப்பட்டறைகளிலிருந்து புதிய விடயங்களைப் பற்றிய அறிவை மட்டுமல்லாது, இலங்கையின் நவீன மற்றும் சமகால கலைகளில் மீள் புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தையும் எடுத்து செல்வார்கள் என நம்புகிறோம்.”

’சந்திப்புகள்’ கண்காட்சியின் ஒவ்வொரு புதிய சுழற்சிக்கு முன்னர், MMCA இலங்கை அருங்காட்சியகத்துடன் தொடர்புபட்ட கல்வியாளர்களுக்கு தனிப்பட்ட பார்வையை ஒழுங்கு செய்தனர். MMCA இலங்கையின் கல்விசார் நடவடிக்கைகளை ஊக்குவிக்க, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவால் ஒழுங்கு செய்யப்பட்ட மேலும் ஓர் முன்னெடுப்பாகும் இதுவாகும். ’சந்திப்புகள்’ கண்காட்சியின் சுழற்சி 1 மற்றும் 2ற்கு முதல், 10 பெப்ரவரி மற்றும் 22 ஜூன், 2022 அன்று ஒழுங்கு செய்யப்பட்ட தனிப்பட்ட பார்வைக்கு 34 ஆசிரியர்கள் வருகை தந்திருந்தனர். ”கல்வியை மையமாகக் கொண்ட அருங்காட்சியமானதால், விருந்தினர்களுக்கு கற்றல் அனுபவங்களை அளிப்பதற்கு நாம் முன்னுரிமை அளிப்போம்,” எனக்கூறியன் வீரசேகர,

மேலும் கூறியதாவது, "ஆகையால், ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது நிகழ்ச்சிகளுக்கான தொடர்ச்சியான ஆதரவிற்கு நாம் மிகுந்த நன்றிக்கடன் பட்டுள்ளோம்."

MMCA இலங்கை, பொது நிகழ்ச்சிகளை வெவ்வேறு பின்னணிகளைக்கொண்ட ஓவியர்கள், கட்டிட கலைஞர்கள், வடிவமைப்பாளர்கள் மற்றும் மேலும் பலரைக் கொண்டு நடாத்தியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் மானியம், 103 வழிநடத்துபவர்களைக்கொண்டு பயிற்சிப்பட்டறைகள், கேலரி உரையாடல்கள் மற்றும் மேல பொது நிகழ்ச்சிகளை செயல்படுத்த வழிவகுத்தது. மேலும், இம் மானியம் அருங்காட்சியகத்திற்கு 25 வருகைக் கல்வியாளர்களை பணிக்கமர்த்த வழிவகுத்தது. விருந்தினர்களுக்கும், கண்காட்சிகளுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் இடையே முதலாவதாக அருங்காட்சியகத்தை பிரதிநிதிப்படுத்தி செயல்படுபவர்கள் வருகைக் கல்வியாளர்கள்.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அரசியல், வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளின் சர்வதேச உறவுகள் அதிகாரி ஆன் வோகியர்-சேட்டர்ஜீ இக் கூட்டணியைப்பற்றி கூறியதாவது, "MMCA இலங்கை மற்றும் அதன் தலைமை எடுத்தாளுனர் ஷர்மினி பெரெய்ராவின் புதிய முன்னெடுப்புக்கு ஆதரவு வழங்கியதில் ஐரோப்பிய ஒன்றியம் பெரு மகிழ்ச்சியடைகின்றது. கடந்த காலத்தின் களஞ்சியமாக அருங்காட்சியகங்கள் செயல்பட்டாலும், அருங்காட்சியகங்கள் வாழ்க்கை அனுபவங்களை கொண்டிருக்கும் தளங்களாகவும் செயல்பட வேண்டும். இதை 'சந்திப்புகள்' கண்காட்சி வெற்றிகரமாக செயல்படுத்தியது." கண்காட்சியின் சமூக மற்றும் அரசியல் முக்கியத்துவத்தைப் பற்றி வோகியர்-சேட்டர்ஜீ குறிப்பிட்டதாவது, "'சந்திப்புகள்' நாட்டின் நவீன மற்றும் சமகால கலையைப் பார்வையிட புதிய வழியை உருவாக்கிய அதே வேளையில், சமூக மற்றும் அரசியல் அபிவிருத்திகள் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டியுள்ளது. அருங்காட்சியகம் மென்மேலும்

பல்வேறுபட்ட இளம் மற்றும் முதுமையான, எல்லா வர்க்க, கலாசார மக்களையும் உள்ளடக்கும் இடமாக விளங்கும் என நம்புகிறோம்.”

நவீன மற்றும் சமகால கலைக்கான இலங்கை அருங்காட்சியகத்தைப் பற்றிய மேலதிக தகவல்களுக்கு www.mmca-srilanka.org நாடுங்கள் அல்லது முகப்புத்தகத்தில் facebook.com/mmcasrilanka அல்லது இன்ஸ்டாக்ராமில் instagram.com/mmcasrilanka/ தொடருங்கள்.